# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 148 — 1975 ජනවාරි 24 වැනි සිකුරාදා — 1975.01.24

148 ஆம் இலக்கம்—1975 ம் ஆண்டு சனவரி மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 33 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் .. .. | 33 | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 42 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 36 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 39 | | |


*கவனிக்க.—(i) இலங்கைச் சுதந்திரத் திருச்சபைகள் ஒன்றியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் இலங்கைச் சுவிசேஷக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் கொழும்பு சுவிசேஷ தேஸ்தலம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் 1975 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (ii) உள்நாட்டாசிறை (குறித்த சில அலுவலர்களின் பதவிப் பெயர்களை மாற்றுதல்) சட்டமூலம் 1975 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

### சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*இல. டி 240/டி.ஐ.எஸ்.ரி.*

***இலங்கைக் கடற்படை—நிரந்தரக் கடற்படை அதி உத்தமமாம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அரசாணையமர்வுப் பிறக்கீடு***

*இலங்கைக் கடற்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த கீழ்க் குறிப்பிடப்பட்ட அலுவலரின் அரசாணையமர்வை 1975, சனவரி 15 ஆம் திகதி முதல் பிறக்கீடு செய்தலை அதி உத்தமமாம் சனாதிபதி அவர்கள் அங்கீகரித்துள்ளார் :—*

*சப் லெஃரினன்ற் எம். கே. பி. பத்மசந்திர, எஸ். எல். என்.*

*அதி உத்தமனரின் ஆணைப்படி,*

*வி. ரி. ஜயசிங்ஹ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு, 1975, சனவரி 13 ஆம் தேதி.*

*1-816 —24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148*

### அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*1975 இன் இல. 16*

*අමප 463/74/අධිසේල. 33*

***இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினாற் செய்யப்பட்ட நியமனங்கள்***

*திரு. எம். ஜி. எச். த அல்விஸ் அவர்கள், 1974, நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம், மேலும் கட்டளையிடப்படும்வரை, தொழில் நியாயசபைத் தலைவரொருவராக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*ஜெ. டி. ஆரியசிங்ஹ,*
*அமைச்சரவையின் பதிற் செயலாளர்.*

*அமைச்சரவையின் அலுவலகம்,*
*குடியரசுக் கட்டடம்,*
*கொழும்பு 1,*
*1974, திசெம்பர் 12 ஆம் திகதி.*

*1-838/13—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148*

***வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்***

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண் மே மீ 5 ந் உ.*

1975 இன் இல. 17

අමප 463/74/අධිසේ ට. 30

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

பின்வரும் ஆட்கள், 1974, திசெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் மேலும் கட்டளையிடப்படும்வரை தொழில் நியாயசபைத் தற்காலிக தலைவர்களாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளனர் :—

திரு. சி. ஆர். இராஜசிங்கம்
திரு. கெ. சண்முகநாதன்
திரு. ஜி. எச். ஜி. எல். ஏ. த சில்வா
திரு. ஜீ.எஸ். வத்தேகெதற.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, திசெம்பர் 12 ஆம் திகதி.

1-838/12—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 18

අමප 465/74/අධිසේ ට. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

மன்னார், எஸ்பிளனேட் வீதியைச் சேர்ந்த திரு. எம். எம். அபூ தாஹீர் அவர்கள், 1974, ஒற்றோபர் 11 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, மன்னார் மாவட்டத்தினுள் உள்ள மன்னார், மாந்தை இறைவரிப் பிரிவுக்கு காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/4—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 19

අමප 465/74/අධිසේ ට. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

புத்தளம், போல்ஸ் வீதி, எண் 11 இல் அமைந்த "நூர்-உன்-மஹால்" ஐச் சேர்ந்த திரு. எஸ். எம். எம். காசிம் அவர்கள், 1974, ஒற்றோபர் 11 ஆந் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை 1974.01.01 உக்கு முன்பிருந்தவாறுன புத்தளம், சிலாப நீதிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/10—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 20

අමප 609/74/අධිසේ ට. 37

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

வியாங்கொடை, கஹட்டோவிற்ற, "ஆசியா விலா" வைச் சேர்ந்த திரு. எச். எச். எம். ஃபாத்திப் அவர்கள், 1974, நவெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, 1974, சனவரி 01 ஆம் திகதிக்கு முன்பிருந்தவாறுன மூன்னேய கம்பஹ நீதிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எம். எஸ். ஆலிகீவ்,
அமைச்சரவையின் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1975, சனவரி 08 ஆம் திகதி.

1-838/15—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 21

අමප 465/74/අධිසේ ට. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

திருக்கோணமலை, சனெல் ஒழுங்கையைச் சேர்ந்த திரு. ஓ. எல். எம். இஸ்மாயில் அவர்கள், 1974, ஒற்றோபர் 11 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, திருக்கோணமலை மாவட்டத்தினுள் உள்ள கட்டுக்குளம் பற்று கிழக்கு, கட்டுக்குளம் பற்று மேற்கு இறைவரிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/8—2.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 22

අමප 465/74/අධිසේ ට. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

தர்கா-சௌன், எஸ். எம். வீதி, "நூர் மஹால்" ஐச் சேர்ந்த திரு. மௌலவி எம். செய்யத் அஹமத் அவர்கள், 1974.01.01 உக்கு முன்பிருந்தவாறுன களுத்துறை நீதிப்பிரிவுக்குக் காதியாக, 1974, ஒற்றோபர் 11 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்,

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/1—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 23

අමප 465/74/අධිසේ ට. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் செய்யப்பட்ட நியமனங்கள்**

நாகம்பகாவிலுள்ள நாகமவைச் சேர்ந்த திரு. எம். எல். ஜமால்தீன் லெப்பை அவர்கள், 1974, ஒற்றோபர் 11 ஆந் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, அனுராதபுர மாவட்டத்தினுள் உள்ள நுவரகம்பற்று, கலாகம் பலாத்தல் இறைவரிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்,

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/11—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

1975 இன் இல. 24

අමප 465/74/අධිෂේ උ. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்**

சிலாவத்துறையைச் சேர்ந்த திரு. எம். எஸ். எம். எச். மரிக்கார் அவர்கள், 1974, ஒற்ரோபர் 11 ஆந் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும் வரை, மன்னர் மாவட்டத்தினுள்ளுள்ள முசலி இறைவரிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/5—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 25

අමප 465/74/අධිෂේ උ. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்**

மாத்தறை, இஸ்ஸதீன் ரௌன் ஐச் சேர்ந்த திரு. எம். ஈ. மொஹமெட் அன்வர் அவர்கள், 1974, ஒற்ரோபர் 11 ஆந் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, 1974.01.01 உக்கு முன்பிருந்தவாறுன மாத்தறை நீதிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/3—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 26

අමප 465/74/අධිෂේ උ. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்**

வாழைச்சேனை, ஐந்தாம் வட்டாரத்திலுள்ள ஆலிம் வீதியைச் சேர்ந்த திரு. ஐ. எல். முஸ்தபா லெப்பை ஹாஜியார் அவர்கள், 1974, ஒற்ரோபர் 11 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப் பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, மட்டக்களப்பு மாவட்டத்தினுள் உள்ள கோரளைப்பற்று இறைவரிப் பிரிவுக்கு காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/7—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 27

අමප 465/74/අධිෂ්ඨ උ. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்**

காத்தான்குடி, 4 ஆம் பிரிவைச் சேர்ந்த திரு. எஸ். எம். எம். முஸ்தபா அவர்கள், 1974, ஒற்ரோபர் 11 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும் வரை, மட்டக்களப்பு மாவட்டத்தினுள் உள்ள மண்முனைப் பற்று வடக்கு, எருவில்-போரைதீவு மண்முனைப்பற்று தெற்கு இறைவரிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/6—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 28

අමප 610/74/අධිෂේ උ. 38

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்.**

நுவர-எலிய, சென்ற் அன்ட்றூஸ் ட்றைவ், அன்டர்பாங்க் வீடமைப்புத்திட்டத்தைச் சேர்ந்த திரு. ரி. பி. பஸ்ஸால அவர்கள், 1974, நவெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப் பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, 1974, சனவரி 01 ஆம் திகதிக்கு முன்பிருந்தவாறுன நுவர-எலிய மாவட்டத்தினுள் அடங்கும் முன்னைய நுவர-எலிய நீதிப் பிரிவின் அப்பகுதிக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எம். எஸ். ஆலிஃவ்,
அமைச்சரவையின் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1975, சனவரி 08 ஆம் திகதி.

1-838/16—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 29

අමප 465/74/අධිෂේ උ. 32

**இலங்கை அரசியல்மைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்**

மாத்தளை, தர்மப்பால மாவத்தை, 108 அ ஆம் எண்ணைச் சேர்ந்த திரு. ரி. எம். ஏ. சாலே அவர்கள் 1974.01.01 உக்கு முன்பிருந்தவாறுன மாத்தளை நீதிப் பிரிவின் மாத்தளை மாவட்டத்திற்கு உட்படும் அப்பாகத்துக்கு, 1974, ஒற்ரோபர் 11 ஆம் திகதி தொடங்கி, ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/2—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 30

අමප 465/74/අධිෂේ උ. 32

**இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்**

குருநாகல், றெஸ்ற் ஹௌஸ் வீதி, 15 ஆம் எண் கொண்ட "ஸைன் மஹால்" ஐச் சேர்ந்த திரு. எம். ஓ. எம். தாஹீர் அவர்கள், 1974, ஒற்ரோபர் 11 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப்படும்வரை, 1974.01.01 உக்கு முன்பிருந்தவாறுன குருநாகல் நீதிப் பிரிவுக்குக் காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, நவெம்பர் 22 ஆந் திகதி.

1-838/9—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

1975 இன் இல. 31

අමප 464/74 අධිසේ උ. 31

இலங்கை அரசியலமைப்பின் 126 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையினுற் செய்யப்பட்ட நியமனங்கள்

கொழும்பு 11, கெய்ஸர் தெரு, எண் 161 ஐச் சேர்ந்த திரு. எம். ஏ. ஆர். சங்காணி அவர்கள், 1974, திசெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் ஒரு மூவாண்டு காலப்பகுதிக்கு அல்லது மேலும் கட்டளையிடப் படும்வரை இலங்கை முழுமைக்கும் மெமன் சமுதாயத்தினருக்கான விசேட காதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெ. டி. ஆரியசிங்ஹ,
அமைச்சரவையின் பதிற் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1974, திசெம்பர் 12 ஆம் திகதி.

1-838/14—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 118

---

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1975 இன் இல. 32

| | |
|---|---|
| பா 4/1/2/74 (வா) | பா 4/1/65/74 (வா) |
| பா 4/1/3/74 (வா) | பா 4/1/73/74 |
| பா 4/1/19/74 (வா) | பா 4/1/85/74 (வா) |
| பா 4/1/19/74 | பா 4/1/93/74 |
| பா 4/1/39/74 (வா) | பா 4/1/101/74 |
| பா 4/1/43/74 (வா) | பா 4/1/115/74 (வா) |
| பா 4/1/51/74 (வா) | பா 4/1/12/ம/74 |
| பா 4/1/53/74 (வா) | பா 4/2/13(ii) |
| பா 4/1/63/74 (வா) | பா 4/2/15 |
| பா 4/1/64/74 (வா) | பா 4/2/23 |

பா 4/2/35.

1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 37 ஆம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினேல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான்,

(1) அல்ஹாஜ் எம். முகைதீன் காசிம் அவர்களை கொழும்பு நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(2) திருமதி இயுனிஸ் பிலீஷியா லொயிஸ் பீரிஸ் அவர்களை கொழும்பு நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(3) திருமதி நீடா வினிபிறட் சில்வா அவர்களை கல்கிசை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(4) சார்ள்ஸ் லூயி லயனல் சமரக்கொடி அவர்களை கல்கிசை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(5) சீமன் போதலகே பியதாச பொதேஜு அவர்களை கல்கிசை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(6) பீ. பீ. பலிஸ் அவர்களை கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(7) கே. பீ. எக்கநாயக்க அவர்களை கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(8) ஜயசுந்தா முதியஞ்சேலாகே ஜயசுந்தர அவர்களை கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(9) வாகொட மொஹொட்டி அப்புகாமிலாகே ரஞ்ஜித் குசும்சென் த அல்விஸ் அவர்களை கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(10) அப்துல் மஜீது முகம்மது சமீம் அவர்களை நாவலப்பிட்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(11) ஹீன்பண்டா சமரக்கோன் அவர்களை நுவரேலியா நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(12) செனெவிரத்ன பத்திரணகே குணதாச அவர்களை காலி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(13) அல்பட் விக்ரமசிங்க அவர்களை மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(14) டொன் லுவிஸ் ரூபசிங்க அவர்களை மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(15) மல்லிகாகே ஹென்திரிக் தர்மதாச அவர்களை மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(16) விஜேசூரிய ஹெட்டிதந்திரிகே ரத்னபால அவர்களை மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(17) சோமதாச பத்திரத்ன அவர்களை மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(18) பம்பரந்த மத்தும ஹேவாகே நோனிஸ் அவர்களை ஹம்பந்தோட்டை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(19) சிறிசேன திசாநாயக்க அவர்களை ஹம்பந்தோட்டை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(20) அல்ஹாஜ் மிருசா மரைக்கார் முகம்மது அப்துல் காதர் அவர்களை மன்னுர் நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(21) முகம்மது இஸ்மயில் முகம்மது யசீன் அவர்களை கல்முனை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(22) மான்னப்பெரும முதலிகே டொன் காப்பிரயெல் அப்புகாமி அவர்களை சிலாபம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(23) டீ. எம். டீ. கருணுதிலக அவர்களை அனுராதபுர நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(24) சட்டத்தரணி களுகல பியதாச த சில்வா அவர்களை பலப்பிட்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(25) கில்பட் த சில்வா கருணுதிலக அவர்களை காலி மாவட்டத்திலுள்ள போத்தல கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் காலி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(26) பக்கீர்மீரா நைனு முகம்மது அவர்களை மன்னுர் மாவட்டத்திலுள்ள மன்னுர் கிழக்குக் கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மன்னுர் நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(27) உடுவே விதானெலாகே ஜோஷப் கில்பட் பெரோரா அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள தளுகம பட்டின சபைப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் கொழும்பு நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(28) பஸ்குவல்கே டொன் ஜவன் பண்டிதரத்ன அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள கட்டுநாயக்க-சீதுவ நகர சபைப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் நீர்கொழும்பு நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(29) பேர்சி றேலன்ட் த சில்வா செனெவிரத்ன அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள பத்தரமுல்லை-தலங்கம பட்டினசபைப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் கொழும்பு நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(30) சியம்பலாபிட்டிய விஜேரத்ன அவர்களை கண்டி மாவட்டத்திலுள்ள கங்கபலாத்த உடுநுவர வடக்குக் கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(31) மாரசிங்க முதியஞ்சேலாகே மல்ஹாமி அவர்களை அனுராதபுர மாவட்டத்திலுள்ள கனதரா கோறளைக் கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் அனுராதபுர நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(32) டொன் குணதிலக பியன்வில அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள மாபோதலே கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மினுவங்கொட நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(33) முத்துபண்டாகே பண்டாரநாயக்க அவர்களை அனுராதபுர மாவட்டத்திலுள்ள உந்துறுவ கோறளை கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் அனுராதபுர நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(34) சித்தாதுரகே பீட்டர் அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள அவிசாவளை நகரசபைப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் அவிசாவளை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(35) புற்றிடங்கொண்டார் சுப்பிரமணியம் அவர்களை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வேலணை கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் யாழ்ப்பாண நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(36) மாவனஹேவா குணசிறி த சில்வா அவர்களை பதுளை மாவட்டத்திலுள்ள கொஸ்லன்த கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(37) சூரியஆரச்சி அப்புகாமில்லாகே மலலசேகர அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள கொட்டதெனியாவ கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மினுவங்கொட நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(38) விக்டர் த லிவேரா தென்னக்கோன் அவர்களை களுத்துறை மாவட்டத்திலுள்ள மூங்வத்தபாகெ பற்றுக்கிழக்குக் கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் ஹொரணை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(39) களுபண்டா ரத்நாயக்க அவர்களை நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடபலாத்தக் கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் நுவரேலியா நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(40) ஜயசூரிய கொடிகார அப்புகாமிலாகே டொன் ரைப்ட் விஜயாநந்த ஜயசூரிய அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள அளுத்கம்பெருவ கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் கம்பஹ நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(41) பியன்விலகே தோமஸ் தரிஜு அவர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள திவுலப்பிட்டிக் கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மினுவங்கொட நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(42) கங்கொடகமகே ரெடி குணசேகர அவர்களை மாத்தறை மாவட்டத்திலுள்ள வலிகம கிராமப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(43) கார்த்திய புஞ்சிஹேவாகே பியசேன அவர்களை மாத்தறை மாவட்டத்திலுள்ள வலிகம நகரசபைப் பகுதிக்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(44) ஏ. எம். புஞ்சிநிலமே அவர்களை குருநாகல் மாவட்டத்திலுள்ள பறணகம பகுதிக்கான (பறணகம, அத்துறுவல ரிலிகம ஆகிய கிராமசேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் குளியாப்பிட்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(45) எச். ஏ. பீட்டர் சிஞ்ஞோ அவர்களை குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனிய பகுதிக்கான (தம்பதெனிய, வராவிட்ட, மட்டியகனே ஆகிய கிராமசேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் குளியாப்பிட்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(46) பியதாச சேனநாயக்க அவர்களை மாத்தறை மாவட்டத்திலுள்ள கிரிந்த-வலக்கட (கிரிந்த-மகின்-பகல, கிரிந்த-மகின்-ஒகல, ஹெட்டியாவல, வலகந்த, ஊவிற்றிகமுவ, காரபுட்டுகல ஆகிய கிராமசேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) பகுதிக்கான மேலதிக மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தறை நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(47) மொகல் பேடிகே பியதாச அவர்களை கண்டி மாவட்டத்திலுள்ள தும்பனே உடபலாத்த மேற்கு 'பீ' பகுதிக்கான (இல. 83 அளுத்தெனிய ஏ, 83 ஏ—அளுத்தெனிய பீ 84—கன்னுதெனிய, 85—கலபாவ, 85 ஏ—மீகஹஹேன ஆகிய கிராமசேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரண விசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான சமாதான நீதிவானுகவும்,

(48) விஹாரெகெதர எக்கநாயக்க முதியன்சேலாகே கருணுரத்ன அவர்களை கண்டி மாவட்டத்திலுள்ள தும்பனே உடபலாத்த மேற்கு 'ஏ' பகுதிக்கான (இல. 79—குணதாக, 80—உடுவ, 81—கல்தொல, 82—கினிகம ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் கண்டி நீதிநிருவாகப் பகுதிக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(49) வீ. ஏ. முனிதாச அவர்களை இலங்கைக் கடற்படைத் திணைக்களத்தின் சிவில் நிருவாக உத்தியோகத்தராகப் பதவி வகிக்கும் காலத்துள் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

(50) என். ஜே. அமதோறு அவர்களை கொழும்பு, கல்கிசை நீதிநிருவாக மாவட்டங்களுக்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975, சனவரி 10 ஆம் நாள்.

1—834/1—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 33

1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 68 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான்,

பா 4/ஹம்ப/16/29.

1. ஏ. எம். புஞ்சிநிலமே அவர்களை குருநாகல் மாவட்டத்திலுள்ள பறணகம பகுதிக்கான (பறனகம, அத்துறுவல, றிலிகல ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரண விசாரணை அதிகாரியாகவும்,

பா 4/ஹம்ப 16/30.

2. எச். ஏ. பீட்டர்சிஞ்ஞோ அவர்களை குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனிய பகுதிக்கான (தம்பதெனிய, வராவிற்ற, மற்றியகனே ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரணவிசாரணை அதிகாரியாகவும்,

பா 4/ஹம்ப/1/26.

3. விஹாரெ கெதர ஏக்கநாயக்க முதியன்சேலாகே கருணாரத்ன அவர்களை கண்டி மாவட்டத்திலுள்ள தும்பனே உடபலாத்த மேற்கு 'ஏ' பகுதிக்கான (இல. 79—குணதாஹ, 80—உடுவ, 81 கல்தொல, 82—கினிகம ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரண விசாரணை அதிகாரியாகவும்,

4. மொகல் பேடிகே பியதாச அவர்களை கண்டி மாவட்டத்திலுள்ள தும்பனே உடபலாத்த மேற்கு 'பீ' பகுதிக்கான (இல. 83—அளுதெனிய ஏ. 83 ஏ—அளுதெனிய பீ 84—கன்னுதெனிய, 85— கலபாவ, 85 ஏ—மீகஹஹேன ஆகிய கிராமசேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மரண விசாரணை அதிகாரியாகவும்,

பா 4/ஹம்ப/8/2.

5. பியதாச சேனநாயக்க அவர்களை, மாத்தறை மாவட்டத்திலுள்ள கிரிந்த-வலக்கட பகுதிக்கான (கிரிந்த-மகின்-பஹல, கிரிந்த-மகின்-இஹல ஹெட்டியாவல, வலகந்த ஊவிட்டிகமுவ, காரபுட்டுகல ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளை உள்ளடக்கிய) மேலதிக மரண விசாரணை அதிகாரியாகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு.
கொழும்பு 12,
1975, சனவரி 10 ஆம் நாள்.

1—834/2—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

ரேர்/0227/ஐ

1975 இன் இல. 34

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கொழும்பு 2, யூனியன் பிலேசில் வசிக்கும் செல்வி கொன்ஸ்டன்ஸ் பிரான்சிஸ்கா றஞ்ஜெனி சமறனுயக அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/1—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 35

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

பத்தரமுல்ல இல. 21/2 ல் வசிக்கும் செல்வி மாணக்காற முதியன் செலாகே சிசறினு குணதுங்க அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/10—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 36

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கோட்டை, அத்துல் கோட்டை இல. 898 ல் வசிக்கும் செல்வி சறலா ஜயசூரிய அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/9—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 37

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கொழும்பு 3, டீன்ஸ்டன் இடம் இலக்கம் 11 ல் வசிக்கும் திருமதி யசோதரா ஜயகிருஷ்னன் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/7—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 38

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கொழும்பு 1, கபூர் கட்டிடம், இலக்கம் 15 ல் வசிக்கும் செல்வி கிறிஸ்டின் செல்வராணி யோன்புள்ளே அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/4—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 39

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

வெள்ளவத்தை, டாக்டர் ஈ. ஏ. கூறே மாவத்தை, இல. 14 ல் வசிக்கும் நாராயணசுவாமி மனோகரன் அவர்கள் கல்கிசை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/8—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 40

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

கொழும்பு 4, த வொஸ் மாவத்த இலக்கம் 24 ல் வசிக்கும் செல்வி மாறி செலின் ஸ்வர்ணமாலி விலத்கமுவ அவர்கள் கல்கிசை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்,

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

1975 இன் இல. 41

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

தடிகமகே எமலின் சந்திரவதி ஜயசிங்ஹ அவர்கள் வத்தளை இல. 169 ல் வசிப்பிடத்திலும் அலுவலகத்திலும் நீர்கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1974 டிசம்பர் 20.

1–607/2—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

*1975 இன் இல. 42*

***நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)***

*றணவக்க அச்சிகே சோமபால அவர்கள் பாதுக்க பிரதான அலுவலகத்திலும் கஹவல மேலதிக அலுவலகத்திலும் அவிசாவலை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,*
*பொது நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்*
*செயலாளர்.*

*1974 டிசம்பர் 20,*
*கொழும்பு 1.*

1–607/12—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

*1975 இன் இல. 43*

***நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)***

*தொன் வலன்டயின் அமரசிங்க அவர்கள் கடுவலை பிரதான அலுவலகத்திலும் கொட்டாவ மேலதிக அலுவலகத்திலும் ஹோமகம நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,*
*பொது நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்*
*செயலாளர்.*

*1974 டிசம்பர் 20,*
*கொழும்பு 1.*

1–607/3—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

*1975 இன் இல. 44*

***நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)***

*கண்டி பாஞ்சாலே வீதி இலக்கம் 5 ல் வசிக்கும் காமினி பிரேமதாச இலங்கதிலக அவர்கள் கண்டி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,*
*பொது நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்*
*செயலாளர்.*

*1974 டிசம்பர் 20,*
*கொழும்பு 1.*

1–607/6—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

*1975 இன் இல. 45*

***நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)***

*ஹேனேகெதற வத்தே விக்டர் விஜேகோன் அவர்கள் கண்டி கொழும்பு வீதி இல. 29 ல் உள்ள பிரதான அலுவலகத்திலும் கண்டி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,*
*பொது நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்*
*செயலாளர்.*

*1974 டிசம்பர் 20,*
*கொழும்பு 1.*

1–607/13—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

*1975 இன் இல. 46*

***நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)***

*ஹென்னயக்க முதியன்சேலாகே செனெவிரத்ன பண்டா ஹென்னயக்க அவர்கள் முவன்தெனிய இல. 20 ல் வசிப்பிடத்திலும் அலுவலகத்திலும் லக்கல பள்ளேகம மேலதிக அலுவலகத்திலும் மாத்தளை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,*
*பொது நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்*
*செயலாளர்.*

*1974 டிசம்பர் 20,*
*கொழும்பு 1.*

1–607/11—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

*1975 இன் இல. 47*

***நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)***

*பருத்தித்துறையில் ஆசிரியர்களுடைய பங்களாவில் வசிக்கும் துரைராஜசிங்கம் இரத்தினசிங்கம் அவர்கள் பருத்தித்துறை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிவசுாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,*
*பொது நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சின்*
*செயலாளர்.*

*1974 டிசம்பர் 20,*
*கொழும்பு 1.*

1–607/5—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

# அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டி. பி. 111/50*

***எண் : டி. 223/டி. அய். எஸ். ஸி.***

***கடற்படைச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின்கீழ் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்*
*அமைச்சர்.*

*கொழும்பு,*
*1975, சனவரி 16 ஆம் தேதி.*

*ஒழுங்குவிதிகள்*

*1. இந்த ஒழுங்குவிதிகள் 1975 ஆம் ஆண்டின் கடற்படை (விசாரணைச் சபை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. கடற்படை வியவஹலான எழுத்திலான ஒரு கட்டளை மூலம் விசாரணைச் சபையொன்று கூட்டப்படலாம்.*

*3. புலன்விசாரணையின் தன்மையைப் பொறுத்து, கடற்படையின் கிளை அல்லது பகுதி எதிலுமிருந்து, ஒன்றிலிருந்து மூன்று வரையான எண்ணிக்கை கொண்ட அலுவலர்களை விசாரணைச் சபை கொண்டிருத்தல் வேண்டும்.*

4. தலைவராகச் செயலாற்றும்படி சபையுறுப்பினர் ஒருவரைக் கடற்படை வியவன் நியமித்தல் வேண்டும்.

ஆயின், சபை ஒரேயொரு அலுவலரை மாத்திரம் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய நியமனம் எதுவும் அவசியமாகாது என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் அத்தகைய உத்தியோகத்தரே சபைத் தலைவராயிருத்தல் வேண்டும்.

5. தமக்கறிவிக்கப்படவேண்டுமென அவர் பணித்துள்ள அல்லது போர்ப்படை நீதிமன்றம் ஒன்றின் விசாரணைப்பொருளாக அது அமையுமாவென்ற கேள்வியை யெழுப்பக்கூடிய விடயம் எதிலும் ஒரு முடிவுசெய்யத் தம்மை இயலச் செய்வதற்காக விசாரணைச்சபையின் நடவடிக்கைக் குறிப்புகள் கடற்படை வியவனால் பயன்படுத்தப்படலாம்.

6. கடற்படை வியவனின் கருத்துப்படி, விசாரணைச் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டிய விடயமெதுவும் இலங்கைத் தரைப்படைக்கும் அல்லது இலங்கை வான்படைக்கும் தொடர்புடையதாயிருக்குமிடத்து, அல்லது விசாரணைச் சபையின், இலங்கைத் தரைப்படையின் அல்லது இலங்கை வான் படையின் அலுவலர் ஒருவர் இருத்தல் விரும்பத்தக்கது எனக் கடற்படை வியவனுக்குத் தோன்றுமிடத்து விசாரணைச் சபையின் உறுப்பினர்களாக விருப்பதற்கென விடயத்திற்கேற்றவாறு, தரைப்படையின் அல்லது வான்படையின் அலுவலர்களில் ஒருவரை அல்லது அதற்கு மேற்பட்டோரை, தரைப்படை ஏவுநரின் அல்லது வான்படை ஏவுநரின் சம்மதத்துடன், கடற்படை வியவன் நியமிக்கலாம். ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் கடற்படை வியவனால் தலைவர் என நியமிக்கப்பட்ட அலுவலரே சபைத் தலைவராயிருத்தல் வேண்டும்.

7. கடற்படை வியவன் சபைக்கு ஆராய்வுக்குரிய விடயங்களைக் கொடுத்தல் வேண்டும்; தேவைப்பட்ட புலன்விசாரணையின் தன்மை அதில் விரிவாகக் கூறப்பட்டும், துணிவுகளில் ஆக்கப்படற்பாலதான ஏதேனும் அறிக்கை அல்லது வெளிப்படுத்தல் விதித்துரைக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்.

8. விசாரணையில் சம்மந்தப்பட்ட எல்லா ஆட்களுக்கும், விசாரணைச் சபை கூடும் தேதி, நேரம், இடம் ஆகியவை பற்றியும், மேற்கொண்டு அதன் அமர்வுகளின் தேதி, நேரம், இடம் ஆகியவை பற்றியும், போதிய அறிவித்தல் தலைவரால் கொடுக்கப்படல் வேண்டும்.

9. தண்டனைகள் எதுவும் அளிப்பதற்கான தத்துவம் விசாரணைச் சபைக்கு உரித்தாக்கப்படலாகாது. எவ்வாறாயினும், விடயத்துக்கேற்றவாறாகக் கடற்படை, தரைப்படை அல்லது வான்படை ஆளணியினரைச் சாட்சிகளாக, அதன் முன்னிலையில் அழைத்து எல்லாச்சான்றுகளையும் முன்னிலைப்படுத்துமாறு தேவைப்படுத்தல் என்பனபோன்ற விசாரணையை முறையாக நடாத்துவதற்கு அவசியமாகக்கூடிய, கூடும் அதிகாரத்தை விஞ்சாத தத்துவம் அதற்கு உரித்தாக்கப்படலாம். பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அடிக்கடியும், அத்தகைய முறைமாற்றிலும், சபை மீளவும் கூட்டப்படலாம்.

10. விசாரணைச் சபை நீதித்துறையைச் சார்ந்த குழுவல்ல; சத்தியத்தின்மீது சாட்சிகளை விசாரணை செய்யும் தத்துவம் அதற்கிருத்தலாகாது.

11. வேறுவகையாகக் கட்டளையிடப்பட்டாலன்றி, விசாரணைச் சபை, மறைவான இடத்தில் விசாரணைகளை நடாத்தல் வேண்டும்.

12. விசாரணைச்சபை முன்னர், வழக்குத்தொடுக்குநர் என்ற முறையில் எந்த ஆளும், பிரசன்னமாயிருத்தலாகாது, அல்லது எவரேனும் நண்பர் அல்லது தொழில் முறையிலான ஆலோசகர், விசாரணையில் சம்மந்தப்பட்ட ஆளெவருக்கும் உதவிசெய்ய அனுமதிக்கப்படலாகாது.

13. கடற்படைச் சட்டத்திற்கு அமைந்த ஆளொருவரின் குணவியல்பை அல்லது தொழில்முறை சார்ந்த நன்மதிப்பை விசாரணையெதுவும் பாதிக்குமிடத்து, விசாரணை முடியும்வரை பிரசன்னமாயிருக்கவும் வாக்குமூலம் எதையும் கொடுக்கவும், அவர் கூறவிரும்புவதைக் கூறவும் அல்லது அளிக்கவிரும்பும் சான்று எதையும் கொடுக்கவும், எவரேனும் சாட்சிகளது சான்று அவரது குணவியல்பை அல்லது தொழில்முறைசார்ந்த நன்மதிப்பைப் பாதிக்கின்றதென அவர் கருதினால் அத்தகைய சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும், அவர் குணவியல்பை அல்லது தொழில் முறை சார்ந்த நன்மதிப்பை எண்பிப்பதற்கான சாட்சிகளை முன்னிலைப்படுத்தவும் அவருக்கு முழுவாய்ப்பும் அளிக்கப்படல் வேண்டும்.

14. சாட்சியொருவர் அளித்த சான்றின் உண்மையை, அல்லது செம்மையைப் பரிசோதிக்கும் நோக்கத்திற்காகவும், உண்மையை அவரிடமிருந்து வெளிக்கொணர்வதற்காகவும் விசாரணைச்சபை தேவையானவை எனக்கருதக்கூடிய அத்தகைய கேள்விகளை அச்சாட்சியிடம் கேட்டல், அதன் கடமையாதல்வேண்டும். சாட்சியொருவரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குற்றஞ்சாட்டுக்களாக்குந் தன்மையதாயிருக்கக்கூடிய கேள்விக்கு விடைகூற சாட்சியொருவர் கட்டாயப்படுத்தப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, விசாரணை செய்யப்படுமுன்னர், பின்வரும் வாக்கியங்களின்மூலம் அவர் எச்சரிக்கப்படல்வேண்டும் என்பதுடன் அவர் அவ்வாறு எச்சரிக்கப்பட்டார் என்பது நிகழ்ச்சிக்குறிப்பில் பதியப்படலும் வேண்டும் :—

(அ) கடற்படைச் சட்டத்திற்கு அமைந்த சாட்சிகளுக்கு

"ஏதேனும் கேள்விக்கான விடை உம்மை ஏதேனும் தண்டத்துக்கு அல்லது பறிமுதலுக்கு ஆளாக்குந் தன்மையதாயிருக்கக்கூடிய தாயின், அத்தகைய கேள்விக்கு விடையளிக்க மறுப்பதற்கு உமக்குச் சிறப்புரிமையுண்டு; ஆட்சேபனையெழுப்புதல் உம்மைச்சார்ந்தது; அந்தக் கேள்விக்கு நீர் விடையளிக்கவேண்டுமா அல்லது விடையளிக்க வேண்டாமா என முடிவு செய்தல் விசாரணைச் சபையைச் சார்ந்தது"

(ஆ) கடற்படைச் சட்டத்துக்கு அமையாத சாட்சிகளுக்கு

"கடற்படைச் சேவையைப் பாதிக்கும் ஒரு விடயத்தைப் பற்றி இந்தச் சபை விசாரணை செய்கின்றது; உமது சக்திக்குட்பட்ட எல்லா உதவிகளையும் தருவீர் எனச்சபை நம்புகின்றது. எவ்வாறாயினும், ஏதேனும் கேள்விக்கான விடை உம்மை ஏதேனும் தண்டத்துக்கு ஆளாக்குந்தன்மையதாயிருக்கக்கூடியதாயின் அத்தகைய கேள்விக்கு விடையளிப்பதற்கு நீர் சட்டமுறையாகக் கடப்பாடுடையவரல்லீர்"

15. ஒரு கப்பல் அல்லது கலனின் இழப்பு அல்லது அதற்கு சேர்ந்த அபாயத்தைப் பற்றி விசாரணையின்போது அறியவேண்டியிருப்பின், கப்பலின் ஏவுதல் உத்தியோகத்தர், பின்வரும் ஆவணங்களில் எவை கிடைக்கக்கூடியனவாயுள்ளனவோ அவற்றையும் விசாரணைக்கு இயைபானவையுமான அத்தகையவற்றையும் சபைக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் :—

(அ) கப்பலின் விபரப்புத்தகம்,

(ஆ) எந்திரவறைக்குரிய வரைவிடாப்புக்களும் திருத்தமான இடாப்புக்களும்.

(இ) கப்பலைச் செலுத்துவதற்குப் பின்பற்றப்பட்ட கோட்டுப் படம் அல்லது கோட்டுப்படங்களும் கடல்வழிச் செலுத்துதல் பற்றிய பணிப்புகளும்.

(ஈ) திசைகாட்டி திருப்பங்களைக் காட்டும் கடைசி வாய்பாடு,

(உ) கடற் செலவுப் புள்ளிவிபரப் புத்தகமும் ஜைரோ திசை காட்டி விபரப் புத்தகமும்.

(ஊ) ஏவுதல் உத்தியோகத்தரின் இரவுக் கட்டளைப் புத்தகம்,

(எ) கடற் செலவு உத்தியோகத்தரின் குறிப்புப் புத்தகமும் வேலை பற்றிய புத்தகமும்.

16. சபையினது நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள் சபையுறுப்பினர்கள் எல்லோராலும் கையொப்பமிடப்பட்டு, சபைத்தலைவரால் கடற்படை வியவனுக்கு அனுப்பப்படல் வேண்டும். கடற்படை வியவனால் சபைக்கு வழங்கப்பட்ட எழுத்திலான பணிப்புரைகள், நடவடிக்கைக் குறிப்புகளோடு சேர்க்கப்படுதல் வேண்டும். விசாரணைச் சபையுறுப்பினர்களுக்கிடையில், பிரதானவிடயத்தில், கருத்துவேற்றுமை எழுமிடத்து, கருத்து வேற்றுமைக்கான காரணங்கள் விபரமாகக் கூறப்படல் வேண்டும்.

17. சாட்சியொருவரின் சான்றை படங்கள் மூலம் எடுத்துக்காட்டுவதற்காக நடவடிக்கைகளின்போது முன்னிலைப்படுத்தக்கூடிய எவையேனும் பருமட்டப்படங்கள் அல்லது விளக்கப்படங்கள் நடவடிக்கைக் குறிப்புகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

18. விசாரணைச் சபை நடவடிக்கைகளின் பதிவுகள், கண்டிப்பான சேவை ஆவணமாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், கடற்படை வியவனின் அதிகாரத்தின்மீது அன்றி அதன் படிகள் ஆள் எவருக்கும் அனுப்பப்படுதல் அல்லது காட்டப்படுதல் ஆகாது.

19. நடவடிக்கைகள் பற்றிய அதிகார பூர்வமற்ற வெளியீடு எதனையும் தடுப்பதற்காக, நடவடிக்கைக் குறிப்புகளில் எத்தனை படிகள் ஆக்கப்படல் வேண்டும் என்பதைத் தலைவரே முடிவு செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய படிகள் யாவும் கடற்படை வியவனுக்கு அனுப்பப்படல் வேண்டும். சுருக்கெழுத்தாளர் ஒருவர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தால் கடற்படை வியவனுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துப் பெயர்ப்பின் படியுடன் அல்லது படிகளுடன் சுருக்கெழுத்துக் குறிப்புக்களும் இணைக்கப்படல் வேண்டும்.

20. ஒவ்வொரு சாட்சிக்காரராலும் பதியப்பட்ட சான்று அவர் சான்றளித்து முடிந்ததும் அவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு சாட்சிக்காரரால் கையொப்பமிடப்பட்டு சபைத் தலைவரால் மேலொப்பமிடப்படல் வேண்டும்.

21. விசாரணைச் சபையொன்றின் நடவடிக்கைக் குறிப்புகள், அல்லது விசாரணைச் சபையொன்றின் முன்னர் செய்யப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஒப்புதல், கூற்று அல்லது கேள்விக்கான விடை, பிற எச்சட்டத்திற்கும் அமைய, ஆள் எவருக்கும் எதிரான பிற விசாரணை அல்லது விளக்கம் எதிலும், சபை முன்னர் வேண்டுமென்றே பொய்ச்சான்று அளித்தற்காக அத்தகைய ஆளுக்கான விளக்கத்தில் தவிர, அனுமதிக்கப்படுதல் அல்லது சான்றாக அளிக்கப்படுதல் ஆகாது.

22. படை நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் நீதிமன்றத்தைக் கூட்டும் அதிகாரியினது தற்றுணிபிலும், விளக்கத்தின்போது நீதிபதி—வழக்குரைஞரின் தற்றுணிபிலும், விசாரணைச் சபையில் எடுக்கப்பட்ட சான்றுக் குறிப்புகள் (ஆனால் துணிபுகள், விதப்புரைகள் போன்ற நடவடிக்கைக் குறிப்புகளின் பதிவுகளில் உள்ள, ஏனைய பகுதிகள் அல்ல) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அல்லது அவரது நண்பருக்கு, அவரது வேண்டுகோளின்பேரில் வழங்கப்படலாம். அத்தகைய வெளிப்படுத்தலினால் சேவையின் நலன்களுக்கு அல்லது நீதியெய்துதலுக்கு உண்டாகும் என நீதிமன்றத்தைக் கூட்டும் அதிகாரி அல்லது நீதிபதி—வழக்குரைஞர் கருதினாலன்றி அத்தகைய வேண்டுகோள் சாதாரணமாக வழங்கப்படலாம்; அத்துடன், மேற்கூறப்பட்ட காரணங்களால் தேவைப்படும் என அவர் கருதக்கூடிய அத்தகைய நிபந்தனைகளை (உதாரணமாக, சான்றுகளின் குறிப்புகளினதும் பகுதிகளை மட்டும் வெளிக்காட்டுதல்; பார்க்கக்கூடிய அனுமதி வழங்கப்படும் ஆட்கள் மீதான வரையறைகள்) தோதான அதிகாரி விதிக்கலாம். குற்றச்சாட்டானது, விசாரணைச் சபை யொன்றின் முன்னிலையில் சான்றளித்தலிலிருந்து எழுகின்றவொன்றாய் உள்ளவிடத்து, ஆகக்குறைந்தது சான்றுக் குறிப்புகளின் இயைபான பகுதிகளாயினும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எப்பொழுதும் அளிக்கப்படல் வேண்டும்.

9–840—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(1), 3(8), 4(1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின்கீழ் 1974 யூலை மாதம் 19 ஆந் தேதிய 121 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 17 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்திலுள்ள கொரொம்பாவக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்திற்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

(1) கட்டுபொத்த, சியம்பலாகஸ்கொட்டுவவைச் சேர்ந்த முகமது இஸ்மயில் அப்துல் சமாத் ஹஜ்ஜியார் அவர்கள்.

(2) கொரொம்பாவவைச் சேர்ந்த முலாச்சாரி கம்லத்தலாகே கருணாரத்ன அவர்கள்.

(3) கட்டுபொத்த, நெலும்பத்விலவைச் சேர்ந்த நுவரபக்சகே கொரத்தலா அவர்கள்.

(4) காகஹகெதர, போகஹபிட்டியவைச் சேர்ந்த மாரசிங்க ஆரச்சிலாகே கிரிபண்டா அவர்கள்.

(5) காகஹகெதரவைச் சேர்ந்த நாராயண முதியன்சேலாகே பொடிஅப்புகாமி அவர்கள்.

(6) அலகிட்டியாவவைச் சேர்ந்த அக்குரன்திலககே பேமசந்திர அவர்கள்.

(7) கட்டுபொத்த, காம்பேயைச் சேர்ந்த அதிகாரி முதியன்சேலாகே கிரிமுதியன்சே அவர்கள்,

(8) கட்டுபொத்த, தலுபொத்தகமவைச் சேர்ந்த பகலகம முதியன்சேலாகே கமரால அவர்கள்.

(9) அனுக்கனே, சியாபொலேயைச் சேர்ந்த ரன்கொட்டிகே குலதிலக பமினிகல்ல அவர்கள்.

(10) இத்தலவ, உணலியவைச் சேர்ந்த கருணாதிலககே சுனில்சமரசேகர அவர்கள்.

(11) கிரிமட்டியாவ. வவேகெதரவைச் சேர்ந்த வைத்தியரத்னகே மார்ட்டின் பேமதாச அவர்கள்.

(12) அனுக்கனே, கந்தப்பான்வெலவைச் சேர்ந்த ஜயலத் பேடி துரையலாகே கிரிபண்டியா அவர்கள்.

(13) அனுக்கனே, பமினிகல்லயைச் சேர்ந்த ராஜபக்ச பத்திரனகே மகிந்த ராஜபக்ச அவர்கள்.

(14) கிரிமட்டியாவ, மதல்பொலயைச் சேர்ந்த ரண்கொட்டிகே மார்ட்டின் ரணசிங்க அவர்கள்.

(15) அலகிட்டியாவ, தலகேன்வவவைச் சேர்ந்த கந்தான் பத்திராஜ முதியன்சேலாகே பியசேன அவர்கள்.

(16) கிரிமட்டியாவ, தல்லியத்தயைச் சேர்ந்த லியன பேடிதுரையலாகே களுவா அல்லது உங்கா அவர்கள்.

(17) கட்டுபொத்த, சியம்பலாகஸ்கொட்டுவவைச் சேர்ந்த சம்சுதீன் முகம்மது புகாரி அவர்கள்.

(18) நக்காவத்தை, அளுத்வவயைச் சேர்ந்த பெரும்பட பேடிதுரையலாகே மனிகா அவர்கள்.

(19) போகமுல்லை, வேலல்லையைச் சேர்ந்த அத்துகல்புர சாந்த சேனாரத்ன அவர்கள்.

(20) போகமுல்லையைச் சேர்ந்த கருணாநாயக்க மாறசிங்ககே சேதிரிஸ் வாரகேன அவர்கள்.

(21) கட்டுபொத்த, சியம்பலாகஸ்கொட்டுவவைச் சேர்ந்த அகமத்லெப்பே முகம்மது இல்யாஸ் அவர்கள்.

(22) கொரொம்பாவ, மடிகே கிந்தகொல்லயைச் சேர்ந்த அகமது லெப்பெகே சேகு சுலைமன் அவர்கள்.

(23) இத்தல்வ, உணலியவைச் சேர்ந்த மொகல் பேடிதுரயலாகே ஜோன் அவர்கள்.

(24) போகமுல்லை, ஆண்டிகெதரயைச் சேர்ந்த இலங்கான் பேடி துரையலாகே கிரிசாதுவா அவர்கள்.

(25) கொரொம்பாவ, கவனேகெதரையைச் சேர்ந்த இலங்கரன் பேடிதுரையலாகே பாலயா அவர்கள்.

(26) கொரொம்பாவ, அளுத்வவயைச் சேர்ந்த முத்துகல் பேடிதுரையலாகே பண்டியா அவர்கள்

(27) பகமுனே, பறகஹகொட்டுவவைச் சேர்ந்த இபுறு லெப்பே அசனலெப்பே அவர்கள்.

(28) பகமுனே, கஹடகஹமடயைச் சேர்ந்த முகம்மது சுல்தான் ஓமர்தீன் அவர்கள்.

(29) கட்டுபொத்த, நெத்திபொலகெதறயைச் சேர்ந்த அமரக்கோன் முதியன்சேலாகே ஹோரத் பண்டா அவர்கள்.

(30) கட்டுபொத்த, நெத்திபொலகெதறயைச் சேர்ந்த விஜேசூரியகே பியதாச விஜேசூரிய அவர்கள்.

(31) கட்டுபொத்த, சியம்பலாகஸ் கொட்டுவவைச் சேர்ந்த வாப்புலெப்பை அசனலெப்பை அவர்கள்.

(ஆ) கட்டுபொத்த, சியம்பலாகஸ்கொட்டுவவைச் சேர்ந்த முகம்மது இஸ்மயில் அப்துல் சமாத் ஹஜ்ஜியார் அவர்களை மேற்சொன்ன குழுத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக் கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
**பிரதி நீதி அமைச்சர்.**

**நீதி அமைச்சு,**
கொழும்பு 12,
**1975, சனவரி 16 ஆம் நாள்.**

**9–841—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148**

### நாட்டுப் பொருள்வரிக் கட்டளைச் சட்டம்

### நாட்டுப் பொருள்வரி அறிவித்தல் இல. 614

நாட்டுப் பொருள் வரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சர் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப் படும் தேதி தொடக்கம் 1973.12.21 ஆம் தேதியிட்ட 608 ஆம் இலக்க நாட்டுப் பொருள் வரி அறிவித்தல் 5(3) ஆம் நிபந்தனை யில் பின்வருவதைச் சேர்ப்பதன் மூலம் திருத்தப்பட வேண்டு மெனப் பணித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. "எனினும் நாட்டுப் பொருள்வரி ஆணையாளர் அல்லது அரசாங்க அதிபர் உள்ளூர் நிலைமைகளை அல்லது பிற இக்கட்டான சூழ்நிலை களைக் கருத்திற் கொண்டு அவ் மாவட்டத்திலுள்ள சீவல் தொழி லாளர்களின் தொடர்பில் இத்தேவையைத் தளர்த்தலாம். இத் தற்றுணிபைப் பிரயோகப்படுத்தும் பொழுது அரசாங்க அதிபர் அதன் விபரங்களை நாட்டுப் பொருள்வரி ஆணையாளருக்குச் சமர்ப் பித்தல் வேண்டும்."

சி. ஏ. கூரே,
செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு 1,
1975 சனவரி மாதம் 10 ஆந் தேதி.

9–837—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### தலைமை—கொழும்பு

வருடாந்தக் கணக்கெடுப்புக்காக இந் நிறுவனம் 1975 பெப்புருவரி 3 ம், 4 ம் திகதிகளில் மூடப்பட்டிருக்கும்.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டடம்,
கொழும்பு 1.

பீ. ஏ. ரி. குணசிங்ஹ,
சிறுகைத்தொழிற் பணிப்பாளர்.

9–611—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

---

### கடற்றொழில் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20(3) இன் கீழ் அறிவித்தல்

1974.09.13 ந் தேதிய இல. 129 கொண்ட இலங்கைக் குடியரசின் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட மேற் கூறிய மீன்பிடித் தகராற்றின் பிரகாரம், பின்போடப்பட்ட இவ்விசாரணை இப்பொழுது காக்காப் பள்ளி கிராமச் சபை அலுவலகத்தில் 1975 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ம், 19 ம், 20 ம் திகதிகளில் ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிதொடக்கம் நடைபெறுமெனப் பொது மக்களுக்கும், இத்தகாற்றுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இத்தால் அறி விக்கப்படுகின்றது.

ஏ. டி. ஜே. குணவர்த்தன,
ஆணையாளர்.

கொழும்பு 3, 1975.01.15.

1–815—24.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 148

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி .. .. | வெள்ளி | 3.1.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 27.12.74 |
| | வெள்ளி | 10.1.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 3.1.75 |
| | வெள்ளி | 17.1.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 10.1.75 |
| | வெள்ளி | 24.1.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 17.1.75 |
| | வெள்ளி | 31.1.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 24.1.75 |
| பெப்புருவரி .. | வெள்ளி | 7.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 31.1.75 |
| | வெள்ளி | 14.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 7.2.75 |
| | வெள்ளி | 21.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 14.2.75 |
| | வெள்ளி | 28.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 21.2.75 |
| மார்ச்சு .. .. | வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 21.3.75 |
| ஏப்பிறல் .. .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் .. | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 18.4.75 |
| மே | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் .. | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 20.6.75 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.